TIMES OF INDIA
Dated: 08.11.2024

# Ahead of polls, EC seizes food kits with Rahul, Priyanka pics

**Wayanad:** A political row erupted in Wayanad ahead of LS byelections after around 30 food kits, carrying pictures of Congress leaders were seized by Election Commission and police on Thursday. The kits, containing tea dust, sugar, rice, and grocery items, and carrying pictures of Rahul Gandhi, **Priyanka Gandhi**, Karnataka CM Siddharamaiah, and deputy CM D K Shivakumar, were seized from a flour mill located near the residence of a local Congress neta, according to sources.



The governing Left alleged these kits were brought for distribution to voters to influence them in favour of Congress in the Nov 13 bypoll. The kit is labelled for distribution to landslide victims, sources added.

However, Congress said these are the same kits previously brought in for distribution to the survivors of the Wayanad landslide disaster. PTI

THE HINDU - TAMIL
Dated: 08.11.2024

மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் தேர்தலில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட இருந்த

# ரூ.588 கோடி பணம், பரிசு பொருட்கள் பறிமுதல்

## தலைமை தேர்தல் ஆணையம் நடவடிக்கை

● புதுடெல்லி

மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களுக்கு சட்டப்பேரவை தேர்தல், 14 மாநிலங்களில் இடைத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்பாதுகாப்பு படை உயர் அதிகாரிகளுடன்தேர்தல்ஆணையம்ஆலோசனை நடத்தியது. அப்போது வாக்காளர்களை கவர பணம் மற்றும் பரிசு பொருட்கள், மது பானங்கள், போதைப் பொருட்கள் கொடுக்கப்படுவதை தீவிரமாக கண்காணித்து தடுக்க வலியுறுத்தியது.

அதன்படி பாதுகாப்பு படையினர் பல குழுக்களை அமைத்து மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் மற்றும் இடைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். மகாராஷ்டிரா மாநிலத்தில் நடைபெற்ற சோதனையில் ரூ.90.5 கோடி மதிப்பில் விலையுயர்ந்த ஆபரணப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. ரொக்கம் ரூ.73.1 கோடி கைப்பற்றப்பட்டது.

மது மற்றும் போதைப் பொருட்கள் ரூ.38 கோடி மதிப்பில் கைப்பற்றப்பட்டன. வாக்காளர்களுக்கு பரிசாக வழங்க ரூ.42.5 கோடி மதிப்பிலான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் ரூ.128 கோடி மதிப்பில் இலவச பரிசு பொருட்கள், ரொக்கம் ரூ.10.5 கோடி, ரூ.9 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள், ரூ.7.1 கோடி மதிப்பிலான மது பானங்கள், ரூ.4.2 கோடி மதிப்பில் தங்கம், வெள்ளி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இரு மாநிலங்களிலும் பறிமுதல் செய்யப்பட்டதை ஒப்பிட்டால், கடந்த சட்டபேரவை தேர்தலின் போது கைப்பற்றியதைவிட பல மடங்கு அதிகம் இருந்தது. மகாராஷ்டிராவில் கடந்த 2019-ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் ரூ.103.6 கோடி மதிப்பிலான பொருட்கள் கைப்பற்றப்பட்டன. ஆனால் அங்கு இதுவரை கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் பொருட்களின் மதிப்பு ரூ.280 கோடியை எட்டிவிட்டது.

ஜார்கண்ட்டில் 2019-ம் ஆண்டு ரூ.18.8 கோடி மதிப்பிலான பொருட்கள் மற்றும் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. ஆனால், அங்கு தற்போது ரூ.158 கோடி மதிப்பில் பணம் மற்றும் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் இடைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட 2 மக்களவை தொகுதிகள் மற்றும் 48 சட்டப் பேரவை தொகுதிகளிலும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் பேரில் பாதுகாப்பு படையினர் சோதனை நடத்தினர். இதில் ரூ.70.6 கோடி மதிப்பிலான பொருட்கள், ரூ.21.5 கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள், ரூ.9.4 கோடி மதிப்பில் தங்கம், வெள்ளி பொருட்கள், ரூ.8.9 கோடி ரொக்கம், ரூ.7.6 கோடி மதிப்பிலான மது பானங்கள் என மொத்தம் ரூ.118 கோடிக்கு பறிமுதல் செய்யப்பட்டன.

மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், மற்றும் இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 14 மாநிலங்களில், மொத்தம் ரூ.588 கோடி மதிப்பில் பணம் மற்றும் பொருட்களை தேர்தல்ஆணையம் கைப்பற்றியுள்ளது.